ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

ஒற்றுமையே எங்கள் பலம்...

இதழ் 3
சித்திரை 1-30
2021

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் - 3 வாயிலாக எம்மவர்களை சந்திப்பதில் மகிழ்ச்சி! இந்த மாதம் எமது மகிழ்விற்குரிய மாதமாகும் ஏனெனில், எமது அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது. எம் ஊரவர்கள் அனைவரையும் காத்து வருபவர் எமது ஆலடியான். அவரது மகோற்சவம் என்பது எமது ஊரவர் அனை வருக்கும் கொண்டாட்டத்திற்குரிய நிகழ்வாக திகழ்வது. சென்ற ஆண்டு கொவிட் - 19 காரணமாக தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் எமது ஆலய மகோற்சவம் நடத்த முடியாது போனமையால் எம்மவர் அனைவரும் மனதள வில் துன்பப்பட்டுக் கொண்டிருந்தோம், ஆனால் இறை வனின் திருவருளால் இந்த வருடம் கொரோனா கட்டுப்பாடு களை அனுசரித்து மிக சிறப்பாக எமது ஆலய மகோற்சவம் நடைபெற்றுள்ளது. இதற்கு எம்மவர்கள் அனைவரின் ஒத்துழைப்பே காரணம். அத்துடன் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு அல்வாய் மனோகரா வாசிகசாலையால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளும் கோலா கலமாக நடை பெற்றுள்ளது. நாங்கள் பத்திரிகை எம்மவர்களிடையே பலத்த வரவேற்பை பெற்றுள்ளது. அதற்கு எமது நன்றிகள். நீங்கள் அனைவரும் இதில் எழுத வேண்டும். எம்மவர்கள், எமது ஊர் நிகழ்வுகள், செய்திகள் பற்றிய தகவல்களை தர வேண்டும். இது எமது வரலாற்று பதிவாக அமையும். கோபதாபங்கள், தனி மனித விரோதங்கள் என்பவற்றை களைந்து இணைந்து செயற்படுங்கள். உங்கள் ஆக்கங்களை, பதிவுகளை, எழுத்துக்களை நாம் விரும்பி வரவேற்கின்றோம். 3 ஆசிரியர்கள் ஒழுங்கமைப்பிற்காக இருக்கின்றோமே தவிர இது நம்மவர் அனைவரினதும் பத்திரிகை என்பதை நினைவிற் கொள்ளுங்கள். வாழ்வின் இறுதிப் பருவத்தில் எம்மவர்களில் பலர் வாழ்ந்து வருகின்றீர்கள். உங்களுக்கு தெரிந்த அரிய தகவல்களைத் தயவு செய்து பகிருங்கள். புதிய தலை முறைக்கு எமது பாரம்பரியங்கள், ஆளுமைகள் பற்றி அறியத் தாருங்கள். எமது ஊரவரின் திருமணம், புதிய குழந்தைகள் பிறப்பு போன்ற தகவல் களை அறிந்தவர்கள் தயவு செய்து தெரிவிக்கவும், ஏனெனில் வெளி இடங்களில் நடைபெறும் மேற் சொன்ன விடயங்களை அறிவது கடினமாக உள்ளது. எனவே உறவினர்கள் தெரிவித்து உதவுங்கள் கொரோனா தொற்று பிரச்சினைகள் காரணமாக இந்த இதழ் சிறிது காலம் பிந்தியமைக்கு வருந்துகின்றோம்.

- க.பரணீதரன்

## உள்ளே...

1. அல்வாய் சாமணந்தறை (பெலி) வைரவர் ஆலயம்

2. வாழும் போதே வாழ்த்துவோம் அதிபர் தாமு வீரசிங்கம்

3. அல்வாய்க் கிராம கலைப்பாரம்பரியத்தின் மூத்தகலைஞர் திரு இ.சவலை(சிசுபாலன்) அவர்கள் பற்றிய ஒரு பார்வை

4. சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

5. ஆளுமைமிக்க சமூக சேவகராக விளங்கிய கிராமசேவகர் அமரர் திரு செல்வராசா செல்வலிங்கம்

6. அழகிய காலமாய் மிளிரும் அல்வாய் மனொகராக் கிராம உள்ளூர் விளையாட்டு நினைவுகள்

7. குறிச்சி – 1 – மந்தடி

8. நட்சத்திரப்பா கிணறு

9. 2021 அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம்

10. மீள் பிரசுர நம்மவர் கவிதைகள்
    கந்தையா பரமானந்தம்
    அல்வாயூர் சிவ.சிவநேசன்
    மானந்தன்
    க.பரணீதரன்
    சி.செல்வநாதன்

11. மற்றும் பல செய்திகள்...

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# அல்வாய் சாமணந்தறை (பெலி) வைரவர் ஆலயம்

கணபதிப்பிள்ளை வரதவேல்

சைவசமய வரலாற்றில் சிறு தெய்வ வழிபாடுகள் இன்றியமையாத தாகும். வைரவர், காளி, அண்ணமார், ஐயனார், பெரியதம்பிரான் போன்ற பல சிறுதெய்வங்களை தமது குடியிருப்பு களுக்கு அருகாமையிலுள்ள வளவுகளில் வைத்து வழிபடுவதை இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றது. எமது தந்தை கணபதிப்பிள்ளை அவர்கள் வைரவப் பெருமான் மீது அதீத பக்தி கொண்டமை யால் 1947 ஆம் வருடம் அவர் பிறந்து வளர்ந்த மாவடிச்சோலையில் அமைந்த அவரது வளவில் வைரவர் ஆலயத் தினை அமைத்து பூஜையினைச் செய்து வழிபட்டு வந்தார். காலப்போக்கில் ஆலயத்திற்கு தனியான காணியினை கொள்வனவு செய்து அதில் வைரவப் பெருமானுக்குரிய ஆலயத்தினை அமைத்து வழிபட வேண்டும் என்ற சிந்தனை அவரது மனதில் மேலோங்க 1956 ஆம் வருடம் அவரும் எமது தாயார் செல்லம்மாவின் தந்தையாராகிய நாகர் வேலுப்பிள்ளை அவர்களும் இணைந்து சாமணந்தறையில் (தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடம்) காணியினை கொள்வனவு செய்து அவ்விடத்தில் சிறிய கொட்டிலில் ஆலயத்தினை அமைத்து வழிபாடு செய்து வந்தார்கள். தற்போது ஆலயத்தினை புனரமைப்புச் செய்து சீமெந்துக் கற்களால் கட்டப்பட்ட மண்டபத்தில் பிரதிஷ்டா செய்து பூஜைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



*பெலி வைரவரின் 2021 ஆம் ஆண்டு பொங்கல் நிகழ்வு சித்திரை 10 ஆம் திகதி வெகு சிறப்பாக ஆலயத்தில் நடை பெற்றது.*

ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழாவானது ஒவ்வொரு வருடமும் தைப்பூசத் தினத்துக்குப் பின்பே நடைபெறுகின்றன. பொங்கல் விழாவுக்கு முதல் வெள்ளிக்கிழமை நாட்கப்பு நாட்டி அடுத்துவருடம் வெள்ளிக்கிழமை இரவு வழுந்துப் பானைகள் மூன்று வீடுகளில் இருந்து (ஐந்து வழுந்துப் பானைகள்) ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு பூஜை வழிபாடுகள் நிறைவுற்றதும் வழுந்துகள் கட்டிப் பொங்கல் நடைபெறும். இரவு முழுவதும் அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து பொங்கலுடன் வேறு பிரசாதங்கள் செய்து தங்களது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள். மறுநாள் சனிக்கிழமை காலை வயிரவப் பெருமானுக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் பெரியளவில் மடைபரப்பி பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுவதுண்டு. அன்று காலை அடியவர்கள் தங்களது நேர்த்திக் கடன்களுக்காக கடா ஆடுகள் மற்றும் சேவல்கள் என்பவற்றைக் கொண்டு வருவது வழக்கமாகும். பூஜை நேரத்தில் அவற்றிற்கு மஞ்சள் நீர் தெளித்து விடுதல் சிறப்பான நிகழ்வாகும். அன்றையதினம் ஆடுகள், சேவல்கள் என்பவற்றை விலைக்கு வாங்குவதற்காக எமது கிராமம் மற்றும் அயற்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆலயத்தில் ஒன்று கூடுவார்கள். அந்த நேரத்தில் சந்தைப்படுத்தல் இடமாக காணப்படும்.

1947 ஆம் ஆண்டு ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை ஆலயத்தில் அசைவ உணவுகள் சமைப்பதில்லை. மேலும் வருடாந்தம் பொங்கலுக்குரிய முன்னேற்பாடான நாட்கப்பு நாட்டிய நாளிலிருந்து பொங்கல் நிகழ்வு நிறைவு பெறும் வரை ஆலயத்துக்கு உரித்தானவர்கள் அனைவரும் சைவ அனுஷ்டானங்களை கடைப்பிடித்து வருவார்கள். அத்துடன் வருடந்தோறும் சித்திரை மாதத்திற்கு பின்பு ஆலயத்தில் கஞ்சி வார்வை நிகழ்வு வெகுசிறப்பாக நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலயத்தின் பூஜைமுறைகளை எமது தந்தை கணபதிப்பிள்ளை அவர்களும், அதற்குப் பின்பு எமது தாயாருடைய தந்தை நாகர் வேலுப்பிள்ளை அவர்களும் அதனைத் தொடர்ந்து விசகடி வைத்தியர் வேலுப்பிள்ளை அவர்களும் செய்து வந்தனர். 1982 ம் ஆண்டிலிருந்து இன்றுவரை எனது மூத்த சகோதரன் வே.க.தங்கவேல் அவர்கள் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.

இன்று இந்த ஆலயம் அமைந்திருக்கும் இடமானது “வேலன் செல்ல கணபதி வளவு” என்ற பெயரோடு அமைந்திருக்கின்றது.

# வாழும் போதே வாழ்த்துவோம் அதிபர் தாமு வீரசிங்கம்



க.தர்மதேவன்

அல்வாய் மனோகரா கிராமத்தின் மிக முக்கியமான ஆளுமைகளில் ஒருவரும் தொண்ணூறாவது வயதைத் தாண்டியும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் ஓய்வு நிலை அதிபர் தாமு வீரசிங்கம் அவர்கள்.

எமது கிராமத்தின் கிழக்கெல்லையிலுள்ள கொக்கட்டியாவளவு குறிச்சியில் 21.01.1931 ஆம் ஆண்டு தாமு பொன்னம்மா தம்பதியினரின் இரண்டாவது பிள்ளையாகப் பிறந் தார். ஐந்து பெண் சகோதரிகளையும் ஒரு சகோதரனையும் உடன் பிறப்புக்களாகக் கொண்டவர். எங்கள் கிராமத்தின் இன்றைய பல வளர்ச்சிக்கு அன்றைய ஆசிரிய முன்னோடிகள் பெரிதும் காரணமானவர்கள். கவிஞர் மு. செல்லையா, தி.ம.செல்லத்துரை, திரு க.முருகேசு போன்றவர்கள் முதல் தலைமுறை ஆசிரியர்களாக இருந்தபோது இரண்டாம் தலை முறை ஆசிரியர்கள் வரிசையிலே திரு தா.வீரசிங்கம் அவர்கள் முதன்மை பெறுகின்றார்.

யா/தேவரையாளிச் சைவ வித்தியாசாலையில் (தற்போதைய யா/தேவரையாளி இந்துக்கல்லூரி) தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து 1947 ஆம் அண்டு S.S.C.(Senior School Certificate) தமிழ் மொழி மூலம் தோற்றி சித்தியடைந்தார். கவிஞர் மு.செல்லையா, சைவப்புலவர் சி.வல்லிபுரம், திரு ம. செல்லத்துரை, திரு க.முருகேசு, திருமதி பொன்னம்மா, திருமதி மீனாட்சியம்மா போன்றோரிடம் கல்வி கற்றார். மேலும் ஆங்கில மொழி மூலம் கற்பதற்காக(1948-1950 வரை) யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்குச் சென்றார். இவரது ஆங்கில கல்விக்கு வழிகாட்டியாகவிருந்தவர் கல்லூரி அதிபராகவிருந்த டாக்டர் சிவப்பிரகாசம் ஆவார். இக் கல்லூரியிலிருந்து தமிழ்மொழி மூல ஆசிரிய பயிற்சிக்கான புகு முகப் பரீட்சைக்கு தோற்றி அதில் சித்தியடைந்து பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியராக வெளியேறினார்.


மாத்தளை சாகிராக்கல்லூரி, களுத்துறை மத்துகம குருதொல அரசினர் சிங்கள தமிழ் கலவன் பாடசாலை (தமிழ் பிரிவு பொறுப்பாசிரியர்), யா/கட்டுவன் புலம் அ.த.க.பாடசாலை, யா/கம்பர்மலை அ.த.க.பாடசாலை, யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை, யா/இமையாணன் அ.த.க.பாடசாலை, யா/வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை, யா/தேவரையாளி இந்துக்கல்லூரி(கனிஷ்டபிரிவு அதிபர்) போன்ற பாடசாலைகளில் தனது ஆசிரியப்பணியினை மேற்கொண்டார். தேவரையாளி இந்துவில் தொழில்நுட்பப் பிரிவின்(முறைசாரா) பொறுப்பாசிரிய ராக கடமையாற்றி இடைவிலகலுக்குள்ளான பல மாணவர் களின் எதிர்கால தொழில் வாய்ப்புக்கு வழிகாட்டினார்.

குருதொல அ.சி.த.க. பாடசாலையில் கடமையாற்றிய காலங்களில் பல சிங்கள மாணவர்களுக்கு தமிழ்மொழி கற்றுக் கொடுத்தார். இதில் முக்கியமான அரசியல்வாதிகளில் ஒருவரான விக்கிரமபாகு கருணாரத்தின அவர்களும் ஒருவராவார். அண்மையில் பத்திரிகையொன்றில் வெளியான கட்டுரையில் இதனை அவரே குறிப்பிட்டிருந்தார். தென்னிலங்கையிலுள்ள பல முற்போக்கு சக்திகளின் நட்பின் காரணமாக லங்கா சமஜமாசக் கட்சி உறுப்பினராகவும் இணைந்து கொண்டார். இதன் காரணமாக Dr.N.M. பெரேரா, Dr. கொல்வின் R.D.சில்வா, வாசுதேவ.நாணயக்கார, Dr.விக்கிரம கருணா ரட்ண ஆகிய தலைவர்களுடன் மிக நெருங்கிச் செயற்பட்டார். இதன் காரண மாக ஐ.தே.கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுடனும் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இந்த செல்வாக்கின் காரணமாக ஊரிலுள்ள சிலருக்கு அரச வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்தார். தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொருளாளர், தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் உடுப்பிட்டி கட்டைவேலி கிளையின் நியமனத்தலைவர் பதவியை ஏற்று சங்கத்தின் செயற்பாடுகளை வளர்த்தார்.

எமது கிராமத்தின் வாசிகசாலை அழிவுற்றிருந்த 1947 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் சில நண்பர்களுடன் இணைந்து மூன்றாம்பனையடி என்ற இடத்தில் சிறு கொட்டில் அமைத்து புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிப்பதற்கு வழி செய்தார். சிறிது காலத்தின் பின்னர் தற்போது அமைந்துள்ள இடத்திற்கு மாற்றப் பட்டு கவிஞர் செல்லையா அவர்களால் “அல்வாய் மனோகரா சன சமூகநிலையம்” என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்நிலையத்தின் தலைவர், செயலாளர் பதவிகளில் பல காலம் கடமையாற்றினார். செயலாளராக இருந்த காலத்தில் முதன் முறையாக மின்னொளி யில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடாத்தியமையும் குறிப்பிடத் தக்கது. மேலும் இக்கழகத்தின் கரப்பந்தாட்டக் குழுவின் தலைவ ராக இவர் செயற்பட்ட காலத்தில், வடமராட்சியில் வேறு கழகங்கள் நடாத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் பலவற்றில் விளையாடி எமது கழகம் பல சாதனைகளை படைத்ததோடு பல வெற்றி கேடயங்களையும் தமதாக்கிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் எமது ஆலயமான சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோவில் நிர்வாக சபையின் தலைவராக செயலாள ராகச் செயற்பட்டு ஆலயத்தின் அபிவிருத்திக்கு உதவினார். மேற்படி ஆலயத்தின் கொடித்தம்பத்தை உபகரித்ததோடு 7 ஆம் நாள் சப்பறத் திருவிழாவின் பூசைத் தலைவராகவும் இருந்து இன்றுவரை தனது கடமைகளை செயற்படுத்தி வருகின்றார்.

பிறந்த குடும்பத்திற்கும், புகுந்த குடும்பத்திற்கும் நற் தலைவனாகவும் எமது கிராமத்தின் மிக முக்கியமான ஆளுமை களில் ஒருவராகவும் திகழ்ந்ததோடு இன்று வரை தனது பெயருக்கேற்ப வீரமிகு சிங்கமாகவே வாழ்ந்து வரும் திரு தாமு வீரசிங்கம் அவர்கள் என்றும் பெருமைக்குரியவர்.



# அல்வாய்க் கிராம கலைப்பாரம்பரியத்தின் மூத்த கலைஞர் திரு இ.சவலை (சிசுபாலன்) அவர்கள் பற்றிய ஒரு பார்வை

கலாநிதி த.கலாமணி

அல்வாய்க் கிராமத்தின் கலைவரலாறு பதிவு செய்யப்படும் போது நினைக்கப்பட வேண்டிய மூத்த கலைஞர்களுள் முதன்மை யானவர் திரு இ.சவலை அவர்கள் ஆவர். *15.04.1899* இல் பிறந்த இவர் *27.08.1974* வரை எழுபத்தைந்து ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்த வர். சைவநெறியாளரான இவர் மதுவுக்கோ அசைவ உணவுக்கோ இடமளிக்காமல் சைவ வாழ்வு வாழ்ந்தவர். இதனால் வாழ் நாட் காலம் முழுவதும் ஊரவராலும் பிற ஊரவர்களாலும் நன்கு மதிக்கப் பெறுபவராக விளங்கினார்.

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிற் பரி பாலனசபை *1943*ஆம் ஆண்டில தோற்றுவிக்கப்பட்டு திருவெம் பாவைப் பூஜைகள் ஆரம்பிக்கப் பட்டபோது, பத்துப் பூஜைகளுக்கு முரிய தானேசராக (சங்கற்பகார ராக), சைவ ஆசார சீலரான திரு இ.சவலை அவர்களின் பெயரையே பொதுச்சபை முன்மொழிந்து ஏற்றுக் கொண்டது. பின்பு பத்துப் பகுதியினருக்கு திருவெம்பாவைப் பூஜைகள் பிரிக்கப்பட்டபோது, பத்தாம் பூஜை உபயகாரராக திரு இ.சவலை அவர்கள் விளங்கிய தோடு, அப்பூஜையின் சங்கற்பகார ராகவும் இருந்து வந்தார். அலங்கார உற்சவமும் ஆரம்பிக்கப்பட்ட வேளை, தீர்த்தோற்சவ விழாவின் சங்கற்பகாரராகவும் இவர் விளங் கினார். அவ்விழாவில் எம் பெருமான் தீர்த்த மாடும்போது அஷ்டதேவருடன் சேர்ந்து சங்கற்பகாரரான திரு இ.சவலை அவர்களும் திருமுழுக்காடும் காட்சி அனைவரையும் பக்திப் பரவசம் கொள்ளச் செய்யும்.

எமது ஆலயத்திலே கூட்டுப்பிரார்த்தனை ஆரம்பிக்கப்பட்டபோது வெள்ளி தோறும் தவறாது கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் ஒருவராக திரு இ.சவலை அவர்கள் விளங்கினார். இடைக்காலங்களிலே கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சி தொய்வுகண்டபோதும் கூட தமது பேர்த்தி யாரை கூடவே அழைத்துச்சென்று திருமுறைகள் ஓதி வந்தார். வெள்ளிக் கிழமைகளில் காலையில் தொழில் முடித்து வந்து, எமது ஆலயத்திற்குச் சென்று உள்வீதியில் கருப்பக்கிரக மண்டபத்துக்குப் பின்னால் அமர்ந்து தியானத்தில் அமர்ந்திருப்பார். மதியம்வரை எவ்வித சலனமுமின்றி இவர் தியானத்தில் அமர்ந்திருப்பது நெஞ்சை உருக்கும்.

திரு இ.சவலை அவர்கள் சிறந்த ஒரு கலைஞர். எமது ஊரின் கலைப்பாரம்பரியத்துக்குச் சான்றாக விளங்கிய இவர் “சிசுபாலன்” வேடத்தில் திறம்பட நடித்ததனால் இவரை “சிசுபாலன் சவலை” என்றே பலரும் அழைத்து வந்தனர். இவரின் இப்பெயரைப் பதிவு செய்யும் வகையில் இவரின் அந்திமத்தின் போது இவருக்கான தேகவியோகப்பாக்களை எழுதிய சைவப்புலவர் சி.வல்லிபுரம் அவர்கள் எழுதிய குறிப்பு முக்கியமானது.

> “அல்வாயூரில் சோதிட சித்தாந்தியாயும் தமிழாசிரியராயும்
> சைவப் பெருஞ்சொற் கொண்டலாயும் சைவாசார சீலராயும்
> திகழ்ந்த அமரர் ஸ்ரீமத் க.வே.தம்பையா அவர்களுக்குப்
> பின்பு, அல்வாயூர் மறைந்த கவிஞர் மு.செல்லையா அவர்கள்
> தம் உறவினர்களுள் மிகவும் கௌரவித்து அன்பு செலுத்திய
> ஒருவர் இருந்தால், அன்னவர் அண்மையிற் சிவபதமடைந்த
> இசைநாடகக் கலைஞர் – சைவத்திரு இ.சவலை அவர்களே
> அன்றிப் பிறரெவருமாகார்”

கலைஞர் திரு இ.சவலை அவர்களை தனது “குருபக்தி” என்ற நாடகத்தில் முதன் முதலில் திறம்பட நடிக்கச் செய்த பெருமை நாடக ஆசிரியர் திரு மு.பெரியபொடி (கலாவிநோதன் அண்ணாசாமி ஆசிரியரின் தந்தை) அவர்களையே சேரும். திரு இ.சவலை எப்போதும் தன் குருவை மறவாதிருந்தார்; தாம் நடிக்கும் நாடகங்களில் முதற் காட்சியில் தோன்றும் போது “பெரியபொடி அண்ணாவி என் குருவுக்கு முதல் வணக்கம்” என்று கூறியே தமது நடிப்பை ஆரம்பிப்பார்.

கலைஞர் திரு இ.சவலை அவர்கள் கதாநாயகனாக நடித்த இசைநாடகங்களில் அவருக்குச் சோடியாக கதாநாயகியாக நடித்து வந்தவர் திரு ச.சின்னத்துரை ஆவார். இவர்கள் இருவரும் இணைந்து திறம்பட நடித்த

அல்லி அருச்சுனா, சங்கீத கோவலன், சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி ஆகிய இசைநாடகங்கள் அல்வாய்க் கிராமத்துக்குப் புகழ் சேர்த்தவை ஆகும்.

கலைஞர் திரு இ.சவலை அவர்கள் பூதத்தம்பி யாகவும் திரு ச.சின்னத்துரை அழகவல்லியாகவும் திரு பொன்னையா (கரவெட்டி) அந்திராசியாகவும் திரு D.T சாமுவெல் ஆசிரியர் அட்மிறலாகவும் திரு மு.பொன்னையா சின்னலாந்தேசுவாக நடித்த "பூதத்தம்பி" நாடகம் மிகவும் பிரபல்யம் பெற்றது. நாலூரவரும் இணைந்து திறம்பட நடித்த காரணத்தால் இந்நாடகத்தைப் பலரும் மெச்சினர். இந்நாடகத்தில் அந்திராசியாக நடித்த கரவெட்டியைச் சேர்ந்த திரு பொன்னையா அவர்கள் அந்திராசி பொன்னையா என்றே சிறப்பாகக் குறிப்பிடப்பட்டு வந்தார்.

ஒரு சமயம் எமது ஊரில் "சம்பூர்ண அரிச்சந்திரா" "ரிக்கற் காட்சியாக" நடைபெற ஏற்பாடாகியிருந்தது. திரு பூ.வைரமுத்து (மல்லாகம்) முன்அரிச்சந்திரனாகவும் திரு V.வைரமுத்து (நடிக மணி) முன் - சந்திரமதியாகவும் கலாவிநோதன் திரு பெ. அண்ணாசாமி பின் - அரிச்சந்திரனாகவும் அண்ணாவியார் திரு ச.தம்பிஜயா பின் - சந்திரமதியாக வும் நடிக்க விருப்பதாக விளம்பரஞ் செய்யப்பட்டு மிருந்தது. ஆனால் நாடகம் இடம் பெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே திரு பெ.அண்ணா சாமி அவர்கள் நடிக்க முடியாமல் சில அசௌகரியங் கள் ஏற்பட்டுவிட்டன. நாடக ஏற்பாட்டாளர்களுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தது. அப்போது, திரு ச.தம்பிஜயா அவர்கள் திரு இ.சவலை அவர்களைக் கேட்டுப் பார்போமென ஆலோசனை கூறினார். திரு இ.சவலை அவர்கள் திரு ச.தம்பி ஐயாவுக்கு மாமன். ஆனாலும் திரு இ.சவலை அவர்களது முன் வந்து, இரண்டு நாள் "பழக்கத்துடன்" சிறப்பாக நடித்து நாடகத்தை நிறைவேறச் செய்தார்.

திரு இ.சவலை அவர்கள் சடையர் அவர்களின் மகளான பிள்ளையம்மா அவர்களை மணம் முடித்து மூன்று பெண்பிள்ளைகளையும் பெற்று சிறப்பாக வாழ்ந்தவர். இவரின் மூத்த மகளான தர்மவதி (திரு ப.சபாரத்தினம் அவர்களின் மனைவி), மணம் முடிப்ப தற்கு முன் அண்ணாவியார் திரு ச.தம்பிஜயா அவர் களின் நாடகங்களில் குறிப்பாக நாரதர் வேடத்தில் நடித்து வந்தார். எமது ஊரில், நாடகங்களில் நடித்த முதலாவது பெண் இவரே ஆவார்.

அந்நாளில் எமது ஊரில் உள்ளவர்களுக்கு கடிதம் வரும் போது, அவர்களின் முகவரி எதுவாக இருந்தாலும் அக்கடிதங்களை விநியோகிக்கும் தபாற்காரர் அக்கடித உறைகளில் "சவலை ஐயா வீட்டடி" என்றே குறித்துக்கொள்வார். திரு இ.சவலை அவர்களின் வீட்டுத் தலைவாசலில் அந்நாளிலிருந்தே தபாற்பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இன்றும் அது உள்ளது. இவ்வாறாக, பலரும் அறிந்த ஒருவராக வும் மதிக்கப்பெற்ற ஒருவராகவும் விளங்கியவர் திரு இ.சவலை ஆவார்.

## FA CUP உதைபந்தாட்டத் தொடர்



07.04.2021 அன்று கொலின்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற கலட்டி அணிக்கெதிரான முதற் போட்டியில் எமது மனோகரா உதைபந்தாட்டவீரர்கள் அசத்தலான கோல்களை போட்டு வெற்றி வாகை சூடினர். மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 7:1 என்ற அடிப்படையில் எம் அணியினர் வென்றார்கள். சாருஜன் 2 கோல்களையும், மிதுசன் 2 கோல்களையும் கோகுலன், சுஜந், ஞானா தலா ஒவ்வொரு கோல்களையும் அடித்தார்கள்.

08.04.2021 அன்று கொலின்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற அண்ணாசிலையடி யுத் அணிக்கெதிரான 2 ஆவது போட்டியில் 1:0 என்ற அடிப்படையில் எமது அணியினர் வென்றார்கள். சாருஜன் அற்புதமான ஒரு கோலை பதிவு செய்து அணியின் வெற்றிக்கு உதவினார்.






த.மதுசன், ம.நிதர்சன் ஆகியோர் உதை பந்தாட்ட பயிற்றுவிப்புத் துறையில் D Licence பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.

அது ஒரு காலம் - 3

# சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

– செல்லக்குட்டி கணேசன் –

எமது கிராம முன்னேற்றம் தொடர்பாக காலத்துக்கு காலம் எமது முன்னோர்கள் சிந்தித்து செயற்பட்டு வந்தனர். அச் செயற்பாடுகளில் வெற்றியும் கண்டனர். மகிழ்ச்சியும் கொண்டனர். அது மட்டுமல்லாமல் எமது கிராமத்திற்கு ஒரு அடையாளத்தையும் ஏற்படுத்தித் தந்தனர். அவ்வாறான செயற்பாடுகளில் கலை (நாடகம்) கல்வி, விளையாட்டுக்கள் என்பன முக்கிய பங்கு வகித்தன.

அது ஒரு காலம். சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி என்றால் மனோகரா மைதானம் களை கட்டி யிருக்கும். அயல் கிராமங்களில் இருந்தும், வெளியிடங்களில் இருந்தும் உதைபந்தாட்ட இரசிகர்கள் மைதானத்தில் ஒன்று கூடுவார்கள். நுழைவுக்கட்டணமாக பெரியோர்களுக்கு பத்துச் சதமும் சிறியவர்களுக்கு ஐந்து சதமும் அறவிடுவார்கள். எமது ஊரவர்களுக்கு பிரவேசம் இலவசம்.

இச்சுற்றுப் போட்டியானது கார்த்திகை மாத நடுப் பகுதியில் ஆரம்பித்து மார்கழி மாத இறுதிப் பகுதிக்குள் நிறைவு பெறும். இச்சுற்றுப்போட்டி மு.வைத்திலிங்கம், வே.மண்டலம், மு.பொன்னையா, வ.சுப்ரமணியம் (மணியம்), சி.கந்தவனம், நாகமுத்து ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டதாகும். இவர்கள் யாவரும் குழந்தைப் பாக்கியம் கிடைக்கப்பெறாதவர்கள். அதனால் எல்லாப் பிள்ளைகளையும் தங்களுடைய பிள்ளை களாகக் கருதி, அவர்கள் விளையாடுவதற்குரிய ஒரு களமாக இச்சுற்றுப் போட்டியை நடாத்தி மகிழ்ந்தனர். இக்குழுவில் உள்ள சி.கந்தவனம் என்பவருக்கு காலம் பிந்தி ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே திருமதி வனமலர் அரியநாயகம்.

இச்சுற்றுப் போட்டியானது எந்த ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது என்பதற்கான எந்த பதிவுகளும் இல்லை. வாய் மொழி யாக அறிய முற்பட்ட போது சரியான தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை. இது ஒரு துரதிஷ்டமே. எவராவது அன்பர்கள் இச் சுற்றுப் போட்டி தொடர்பான மேலதிக தகவல்களை எழுத்து மூலமாக தந்துதவினால் அவற்றை "நாங்கள்" இப்பத்திரிகையில் இணைத்துக் கொள்வோம். இது ஒரு தொட்டுக் காட்டும் முயற்சியே.

அப்போது நான் சிறுவன் இன்றைய காலம் போலல்ல அன்றைய காலம். எந்தப் பரபரப்பும் இல்லை. சுதந்திரமான, கீழ்ப்படிந்த செயற்பாடுகள், படிப்பு, விளையாட்டு என்பதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. பாடசாலைக்கு சென்று திரும்பியதும் மைதானம்(வெட்டை) நோக்கிச் செல்வோம். மாலையாக வீட்டிற்கு திரும்புவோம். மேல், கால், முகம் கழுவி எங்களை நாங்களே சுத்தப்படுத்திக் கொள்வோம். விபூதி தரித்து படிக்க ஆயத்தமாகுவோம். குப்பி விளக்குகள் எங்களுக்கு ஒளிதரும். நாங்கள் படிக்கும் வரை அம்மாக்கள் அவ் வெளிச்சத்திலே தங்களது தொழில் முனைப்பில் கவனமெடுத்துச் செயற்படு வார்கள். பின்னர் உணவு தந்து உறங்க வைப்பார்கள். அதிகாலை எழுந்து படிக்க ஆயத்தமாகும் போதும் அக்குப்பி வெளிச்சத்தில் எங்களை படிக்க விட்டு தங்களது வருமானத்திற் கான தொழிலைச் செய்து கொண்டிருப்பார்கள். பின்னர் பாடசாலைக்கு ஆயத்தமாவோம். பெற்றோருக்கு எந்தவிதமான சிரமங்களும் கொடுக்க மாட்டோம். இன்று போலல்ல அன்று எல்லாவற்றிற்கும் நாங்கள் வெளியே தான் சென்று வந்தோம். ஆனால் இன்று அவ்வாறல்ல, எல்லாமே வீட்டிற்குள் வந்து விட்டன. ஆனால் பரபரப்புத்தான் குறையவே இல்லை.

இச்சுற்றுப் போட்டியை முன்னின்று நடாத்தியவர்கள் கல்வியிலே பாண்டித்தியம் பெற்றவர்கள் அல்ல. ஆனால் மிகத் தெளிவோடு வாழ்ந்தவர்கள். எமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு இச்சுற்றுப் போட்டி எந்த விதத்திலும் இடையூறு இல்லாவண்ணம் இருக்க வேண்டும் என்பதிலே கவனமெடுத்துச் செயற்பட்டார்கள். அதனால் தான் பாடசாலை விடுமுறை நாட் களை தெரிவு செய்தார்கள். ஒரு தடவை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரண்டு கழகங்கள் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்ட போது அவர்களை அழைத்து அவர்களுக்கிடையே ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி வழி அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு நல்ல சிந்தனையுடன் செயற்பட்டு எங்களுக்கும் எமதூருக்கும் ஒரு சிறப்பான அடையாளத்தை சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மூலாக ஏற்படுத்தித் தந்த இப் பெரியார்களை அடுத்த சந்ததிக்கு கையளிக்க விரும்பியே இவ் ஆவண முயற்சியில் "நாங்கள்" ஈடுபட்டுள்ளோம்.

இச் சுற்றுப் போட்டியில் எமது பிரதேசத்தை சேர்ந்த பல முன்னணிக் கழகங்கள் கலந்து கொண்டன. அவற்றுள் எனது நினைவுக்குட்பட்டவற்றை இப்பத்தியில் பதிவு செய்து கொள்கிறேன். வதிரி டைமன்ஸ் வி.க, வதிரி மேற்கு பொம்பேஸ் வி.க, கொற்றாவத்தை சிவானந்தா வி.க, நெல்லியடி ஸ்பேஸ் வி.க, வல்வை புளூஸ் வி.க, நெடியாடு உதய சூரியன் வி.க, பருத்தித்துறை யுனைற்ரெட் வி.க, இவற்றுடன் மனோகரா வி.கழகமும் கலந்து கொண்டன. இவற்றில் சில கழகம் A,B என தமது கழகங்களை பதிவு செய்து விளையாடின.

இச்சுற்றுப் போட்டியானது நடாத்தப்படும் காலத்திற்கும் சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி என்ற நாமத் திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அவ்வாறு இருக்க ஏன் இப் பெயரை இச்சுற்றுப் போட்டிக்கு சூட்டினார்கள் என்பது என் மனதில் எழுந்துள்ள வினாவாகும். இச்சுற்றுப் போட்டியின் மூலமாக எமக்கும் எமது கிராமத்திற்கும் ஓர் அடையாளத்தை ஏற்படுத்தித் தந்த பெரியார்களை மனதில் நிறுத்தி, இவர்கள் நினைவாக குறைந்த பட்சம் எமது கிராம மட்டத்திலாவது ஒரு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்தி அவர்களின் பெறுமானங்களை அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டுமென இப்பத்தியூடாக எமது மனோகரா விளையாட்டுக் கழகத்தை கேட்டுக் கொள்கிறேன்.

# ஆளுமைமிக்க சமூக சேவகராக விளங்கிய கிராமசேவகர் அமரர் திரு செல்வராசா செல்வலிங்கம்

க.பரணீதரன்



எமது கிராமத்தைப் பொறுத்த வரையில் பல ஆளுமைகள், கல்வியாலும் பதவிநிலையாலும் அவர்களது சமுதாய நோக்கான சேவைகளாலும் பார் போற்றும் உன்னதங்களாக ஆகியுள்ளார்கள். அந்த வகையில் எமது கிராமத்தில் செல்வராசா ஆசிரியர் அவர்களுக்கும் சரஸ்வதி அவர்களுக்கும் தலைமகனாக 1947.09.11 இல் செல்வலிங்கம் அவர்கள் பிறந்தார். அவர்களது குடும்பத்தில் தலைமகனாக பிறந்த காரணத்தால் அனைவராலும் பெயருக்கு ஏற்றால் போல் செல்லமாக வளர்க்கப்பட்டு வந்தார். துரதிஷ்டவசமாக இவரது அன்னையார் இவர் பிறந்தத 6 ஆவது மாதத்தில் தவறி விட இவரது உறவுகள் இவரை மிகுந்த கவனத்துட னும் அன்புடனும் வளர்த்து வந்தார்கள். இவர் சிறு வயது முதலே நற் பண்புகள் நிறைந்தவராக வளர்ந்து வந்தார். ஆரம்பக்கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் தொடர்ந்து கொழும்பு ஸ்ரபட் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். கற்கும் காலத்தில் அமைதியானவராகவும் பணிவானவராகவும் ஒழுக்கமான வராகவும் பல ஆசிரியர்களது விருப்பத்திற்குரிய மாணவராக வும் விளங்கினார். தாய்மாமன்களான சைவப்புலவர் இ.செல்லத்துரை, டாக்டர் சாம்பசிவம், தகப்பனார் செல்வராசா, சிறிய தந்தை தங்கராசா ஆகியோரின் வழிகாட்டலில் ஆளுமை மிக்கவராக வளர்ந்து வந்தார்.

குடும்ப நிலையை கருத்தில் கொண்டு கல்வியை இடை நிறுத்திக் கொண்டு கட்டைவேலி உடுப்பிட்டி தெற்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கத்தில் எழுதுவினையராக பணி யாற்றினார். அத்துடன் காங்கேசன் துறை சிமேந்துத் தொழிற் சாலையில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர் விநியோகத் திற்கு முகவராகவும் விளங்கினார். இவ்வாறு பணிபுரிந்த காலத்தில் சிமேந்து தொழிற்சாலையில் எமது ஊரைச் சேர்ந்த பல இளைஞர்களுக்கு தொழில் வாயப்புகளை ஏற்படுத்தி கொடுத்து அவர்களது வாழ்க்கைக்கு வழி காட்டியானார்.

தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் விவசாய உத்தியோகத்தராக கடமையாற்றினார். அங்கு உத்தியோகம் பார்த்த காலத்திலே இவருக்கு அல்வாய் வடமேற்கிற்கு கிராம உத்தியோகத்தர் பதவி கிடைத்தது. தனக்கு கிடைத்த பதவியை சரியாக பயன்படுத்தி மக்களுக்கு பல நல்ல சேவைகளை நல்கிய சமூக சேவையாளராக விளங்கினார். இவர் கிராம சேவகராக கடமை புரிந்து காலம் இடர் மிகுந்த போர்க்காலமாகும். அக்காலத்து மக்களது தேவைகளை சரியாக அறிந்து அனைவருக்கு சமமான உரிமை கொடுத்து, அனைவருக்கும் கிராம சேவகர் என்பதற்குமப்பால் நல்லதொரு சமூக சேவ கனாக விளங்கினார். கிராம அபிவிருத்தி, மக்களிடையே நல்லிணக்கம், ஒற்றுமை என்பவற்றை ஏற்படுத்தி வந்த கிராமசேவகர். ஊரிலும் சரி உத்தியோக ஸ்தலத்திலும் சரி நிர்வாகத்திறன் உடையவராக விளங்கி யதோடு அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகியவர். யாருடனும் எந்த பகையும் பாராட்டாமல் அனைவருடனும் சிரித்த முகத்துடன் பழகி வந்தார். தன்னைச் சார்ந்தவர்களை கல்வியிலும், செல்வத்திலும் உயர்வடைய செய்ய பின்நின்றார்.

அமைதியும் பொறுமையும் அனை வருடனும் அன்பாக பழகும் தருமதேவி அவர்களை திருமணம் செய்து இனிமை யான இல்லறம் நிகழ்த்தி வந்த இவருக்கு சாம்பசிவம், சரசா, சர்மிளா, ரம்மியா, தனேந்திரா என 5 பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன; மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார். தன் பிள்ளைகள் கல்வியில் உயர்வு பெற வேண்டும் என்ற நோக்கோடு அவர்களுக்கு நல்ல கல்வி கிடைக்க தன்னாலான உதவிகளை செய்து வந்தார். அதன் பேறாக இவரது 4 பிள்ளைகள் பட்டதாரிகளாகி, இன்று உயர் பதவிகளை வகிக்கின்றார்கள். இவருக்கு சகோதரர்களாக சந்திரலிங்கம், ஸ்ரீரஜனி, ஆனந்த லிங்கம், சோதிலிங்கம், அட்செயலிங்கம், குமரலிங்கம் கிடைக்கப் பெற்றார்கள்.

6 ஆம் திருவிழா உபயகார விளங்கியவர். அல்வாய் சாணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் செயலாளராகவும், அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தில் உறுப்பினராகவும் மேலும் எமது கிராமத்து பல நிர்வாகங்களில் உறுப்பினராக இருந்து பல்வேறு சேவைகளை வழங்கியதோடு பல அபிவிருத்தி களையும் மேற் கொண்டு வந்தார்.

இவரது வாழ்க்கைக்காலத்தில் பல உறவுகளின் உயிர் இழப்புகளை சந்தித்தபோதும் சோர்ந்து போகாது எதிர்நீச்சல் போட்டு வாழ்க்கையுடன் போராடி முன்னுக்கு வந்தார். யாருக்கும் எந்த தீங்கும் இல்லாது அமைதியான மனிதராக வாழ்ந்த இவர் 19.01.1999 அன்று திடீரென இயற்கை எய்தினார். இவரது இழப்பு எமது கிராமத்தவர்களுக்கும் இவரது பணிக்குட்பட்ட பிரதேசத்தவர் களுக்கும் பேரிழப்பாகும். வாழுகின்ற காலத்தில் நல்ல நிர்வாகத்திறன் உடையவராகவும், அனைவருடனும் சிரித்த முகத்துடன் அன்புடன் பழகிய காரணத்தாலும் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகளாலும், திரு செ.செல்வலிங்கம் அவர்கள் இப்போதும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பது போன்ற உணர்வே மேலிடுகின்றது.



# அழகிய காலமாய் மிளிரும் அல்வாய் மனோகராக் கிராம உள்ளூர் விளையாட்டு நினைவுகள்

வெற்றி துஷ்யந்தன்

எங்கள் அல்வாய் மனோகராக் கிராமத்திற்கென ஒரு தனித்துவமும் நன்மதிப்பும் அது எமது மூதாதையர் காலம் தொட்டு இருந்து வருகின்றமை கண்கூடு. கல்வி, கலை, விளையாட்டு என துறைசார் சாதனைகளோடு மேற் குறித்த அடையாளத்ததிற்கான சான்றா தாரங்களை நாம் விரிவாக பார்க்கக்கூடிய வாய்ப்பும் எங்கள் கிராமத்திற்குரியது எனலாம்.

விளையாட்டு என வருகின்ற போது எங்கள் மனோகரா விளையாட்டுக் கழகம் என்கின்றபோதே எங்களுக் குண்டான ஒரு மிடுக்கும் தலைநிமிர்வும் எப்போதும் எங்களிடத்தே இருந்து விடுவ துண்டு. இந்தநிலையில் போர்க்கால வாழ்வியல் வெளியில் அதாவது 1990 களின் நடுப்பகுதி தொடங்கி இரண்டாயி ரங்களின் ஆரம்பம்வரை நானறிய ஒரு அவராஷ்யமான விளையாட்டு எமது கிராமத்திற்குள்ளே நடந்தேறிய காலங் களை அவ்வளவு சுலபத்தில் யாராலும் மறந்துவிட முடியாது. அதாவது எமது கிராமம் சார்ந்து அதற்குள்ளேயே ஏதோ ஒரு அடிப்படையில் வீரர்கள் ஒவ்வொரு அணிகளாகி கிரிக்கெட், உதைபந்தாட்டம் என அநேக விளையாட்டுக்களில் பங்கேற்ற அந்த பொற்காலம் யாராலும் மறந்துவிட முடியாது.

ஆம் மூவிஸ், வேல்ஸ், கொக்ஸ் லக்கிஸ்ரார், சென்டிஸ்ரார் இந்த நாமங்களை எமதுகிராமம் வாழ் 90களின் இளசுகள் என்றைக்கும் மறந்து விடமுடியாது. இப்போது நினைத்தாலும் பசுமையான பல நினைவுகள் பெருக் கெடுத்து ஓடுகின்றது. மூன்றாமம் பனை யடியை சார்ந்த வீரர்கள் மூவிஸ் அணிக் காகவும், கேவோலை, முள்ளா வத்தையை சார்ந்தவர்கள் வேல்ஸ் அணிக்காகவும், கொக்கட்டியாவளவு சார்ந்தவர்கள் கொக்ஸ் அணியாகவும், மயிலிட்டியை யும் அது சார்ந்தவர்களும் லக்கிஸ்ரார் அணியாகவும், சுட்டியர்பாதி மடத்துக் கடவையை சேரந்தவர்கள் சென்ரிஸ்ரார் அணியாகவும் பிரிந்து விளையாடிய அந்த நாட்களை மீட்க வேண்டிய தேவையொன்று இருக்கின்றது. நாமெல்லோரும் மனோகராத் தாயின் பிள்ளைகளாக இருந்தாலும் இந்த காலகட்டத்தில் ஒவ்வொரு அணியினராலும் ஒவ்வொரு சுற்றுப்போட்டிகள் நடாத்தப்பட்டு வந்தன.

இன்று ஐ பி எல் சுற்றுப்போட்டியில் ஒவ்வொரு அணியையும் பிரமாண்டமாகப் பார்க்கின்ற இன்றைய இளவட்டம் ஒன்றை யோசிக்கவேண்டும். எமது கிராம சிறுவர்கள் அன்றைய நாளிலேயே அந்த அழகுறு ஒருங்கிணைப்பு ஊடாக பலவற்றை கண்டவர்கள் என்பதை இந்த அணிகளுக்கிடையிலானஉதைபந்தாட்டம் மற்றும் துடுப்பெடுத்தாட்டம் போன்றவை சில முக்கியமான மைதானங்களில் அந்நாளில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அதாவது மூன்றாம் பனையடி வெட்டை, நொச்சியடி வெட்டை, அரசப்பா வெட்டை, தனத்தியவத்தை வெட்டை, கேவோலை வெட்டை, முள்ளாவத்தை கேகநாதன் வெட்டை ஆகியவற்றில் இடம்பெற்றது. இன்று சிட்னி, காபா, மெல்போர்ண் போன்ற அவுஸ்திரேலியா மைதானங்களில் போட்டி நடைபெறுவது போல அன்று எமது கிராம வெட்டைகள் ஒவ்வொன்றிலுமம் சமநேரத்தில் போட்டிகள் இடம் பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டினால் அணிசார்ந்தவர்கள் வீடுகளில் பாட்டிகள், இராப்போசனம் போன்றவை, அணி ஆதரவாளர்களின் கரவோசங்கள் என அன்றைய நாளில் இந்தப் போட்டிகளும் அதன் நடைமுறைகளும் எமது மனோகரா அணிக்கு பல நட்ட சிறப்பு ஆட்ட வீரர்களை உருவாக்கி கொடுத்தது எனலாம். வாழைக்குலைகள், பற்பொடி பக்கற்றுக்கள், சாப்பாட்டு கோப்பைகள் போன்றன அந்நாளில் ஒஸ்காரை விட மிகப்பெரிய விருதாக எங்கள் கைகளில் தவழ்ந்தது எனலாம்.

அணிவிட்டு அணிமாறுகின்ற தன்மை அப்போது அடிக்கடி நிகழ்கின்ற ஒன்றாக காணப்பட்டது. இதன் காரணமாக தெய்வங்கள் மீதான சத்தியங்கள் வீரர்களிடை பெருப்பங்காற்றியது. நல்ல ஞாபகம் இருக்கின்றது 1999, 2000 என்று நினைக்கின்றேன் மைத்துனன் குகதாசன் குபேந்திரன் அந்நாளில் நல்லதொரு இடது கை துடுப்பாட்ட வீரன் ஒரு தடவை நான் மற்றும் துவாரகன் அங்கம் வகித்த மூவிஸ் அணிக்கு வந்து விளையாடிவிட்டு கொக்ஸ் அணிக்கு சென்றார். அதன் பின்னர் மீளவும் எமது அணிக்கு வந்த போது மீளவும் மாறக்கூடாது என்பதற்காக எங்கள் ஆதிபராசக்தி ஆலயத்திற்கு வெளியே அன்றைய நாளில் காணப்பட்ட வெளி ஆலயத்திற்கு முன்னால் இனி மாறமாட்டேன் என்று சத்தியம் செய்து பின் விளையாடிய சுவாரஸ்யமான சம்பவங்களும் இந்தச் சுற்றுப் போட்டிகளுக்கு பின்னால் நிறையவே இருக்கின்றது.

ஒரு தடவை நான் நினைக்கின்றேன் இன்றைய செல்வதி பெரியப்பா அவர்களின் வீடு இருக்கும் அன்றைய வெட்டையில் இடம் பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மூவிஸ் அணியும் லக்கிஸ்ரார் அணியும் இறுதிப்போட்டியில் மோதிக் கொண்டது. இதில் முதல் போட்டியாக மூவிஸ் சிறுவர் அணியும் இன்னுமொரு அணியும் மோதிய போட்டியில் நானும் விளையாடிய நினைவுகள் வந்து போகின்றது. இந்தப் போட்டியில் க.பாக்கியநேசன் இ.ராஜேஷ் போன்றவர்களும் லக்கிஸ்ரார் அணியில் வி.கவிச்செல்வன் உள்ளிட்டோரும் விளையாடிய நினைவுகளும் வந்து போகின்றது.

அன்றைய நாட்களில் மிகவேக மாக பந்து வீசக் கூடியவர்களாக இ.இராஜேந்திரலிங்கம், க.பரணீதரன், வி.விஜேந்திரா, அ.அனோஜன், த.செந் தூரன், ஜெ.உமாசுதன் போன்றவர்கள் ஒவ்வொரு அணியிலும் காணப்பட்டனர்.

நேரத்திற்கு நேரம் நாளுக்கு நாள் போட்டி விதிகளும் அன்றைய நாளில் மாற்றம் பெறுகின்ற தன்மையையும் காணக் கூடியதாக இருந்தது. மேற்குறித்த வேகப்பந்து வீச்சாளர்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் “புல்டோஸ்” பந்து களை போட முடியாது மீறி போட்டால் நோபோல் பிடிக்கப்படும் எனும் படியான சுவாரஷ்ய விதிகளும் அந்நாளில் இறுக்க மாக கடைப்பிடிக்கப் பட்டது சில போட்டி களில் போட்டிகளில் வெல்கின்ற போது அணித் தலைவர் வர்ணனையாளரால் நேர்காணல் செய்யப் படுகின்ற சர்வதேச தரபோட்டி முறைமைகள் பலதும் அரங் கேற்றம் கண்டன.

ரெனிஸ் பந்தில் உதைபந் தாட்டப் போட்டிகள் பலவற்றை கண்ட மைதானமாக அரசப்பா மைதானம் அந்நாளில் அமைந்தது. காலும் காலும் அடிபடும் சத்தங்களும், கோல் அடித்தலின் கரகோஷமும் என அந்த மைதானத்திற்கு ஒரு வரலாறு உண்டு. எங்கள் கிராமத்து தலைமுறைகளின் கால் தடங்கள் பதியாத இடங்களே இருக்க முடியாது என்பதற்கு நொச்சி யடி வெட்டை என்றைக்கும் தனித்துவமானது. அதிகப்படியான கிரிக்கெட் போட்டிகள் இடம் பெற்ற மைதானமாக நொச்சியபு வெட்டை மற்றும் மூன்றாம் பனையடி வெட்டை ஆகியன அந்நாளில் காணப்பட்டது.

உண்மையிலேயே இந்த அணி களின் சுவாரஷ்ய மான நினைவுகளையும், அந்தக்காலத்தையும் இன்றைய இளையவர் களிற்காய் பதிந்து அவர்களும் அறியவேண்டும் என்பதற்கான இந்தத பிரதியின் நோக்கத்தில் எழுத எழுத பல விடயங்கள், நினைவுகள் சுவாரஷ்யங்களாக வந்து போவதை தவிர்க்க முடிய வில்லை. ஆனாலும் வரையறையை மனதில் எண்ணி இத்தோடு முடிக்க வேண்டிய சூழலும் எழாமல் இல்லை. உண்மையிலேயே அனைத்து சிறப்புக்களும் ஒரு சேர எங்கள் கிராமமட்ட விளை யாட்டுப் போட்டிகளுக்கென்று ஒரு சுவாரஷ்யமான வரலாறு உண்டு அவற்றையும் ஒவ்வொருவரும் எழுதக் கூடியதற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாக இந்தப் பிரதி அமையும் என்ற நோக்கத்தில் இனிய நினைவுகள் அடங்கிய இந்த பிரதியை நிறைவு செய்கின்றேன்.

---

## குறிச்சி - 1

# மந்தடி

செல்லக்குட்டி கணேசன்

இக்குறிச்சியானது அல்வாய் தனத்தியவத்தை ஞான வைரவர் ஆலயத்திற்கு நேர் தெற்காக 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இக்குறிச்சிக்கான பிரதான பாதை தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதியில் ஐம்பது மீற்றர் தூரத்தில் வடக்குப் பக்கமாக செல்லும் ஒழுங்கையே ஆகும். ஒரு காலம் பனை மரங்களால் நிறைந்து காணப்பட்ட இவ்வளவின் ஒரு பகுதியில் அமரர்களான திரு.திருமதி.பொன்னையா பொன்னம்மா தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள். இல்லற வாழ்வின் பயனாக ஐந்து பிள்ளை களைப் பெற்றெடுத்தார்கள். அவர்கள் முறையே கனகேஸ்வரி, சீவரத்தினம், கிருஷ்ணஸ்வரி, பாலபரமேஸ்வரி, சிவமலர் (செல்லக்கிளி) ஆகியோராவர்.

இவர்களுள் கனகேஸ்வரி என்பவர் யாழ்ப்பாணம் கச்சேரி கழக்கு பாரதி வீதியில் வசித்து வந்தவர்களான அமர்கள் திரு.திருமதி.கந்தையா அன்னம் தம்பதிகளின் சிரேஷ்ட புல்வர் எழுதுவினைஞர் திரு.க.தர்மலிங்கம் அவர்களை திருமணம் புரிந்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தார்கள். இன்று அவர்கள் இருவரு விண்ணுலக பயணத்தைத மேற்கொண்டிருந்தாலும் அவர்களது வாரிசுகள் எமது கிராமத்துடன் தொடர்பைப் பேணி வருவது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

பொ.சீவரத்தினம் (மந்தடியான்) :- மந்தடியான் என்று குறிச்சிப் பெயரை அடைமொழியாகக் கொண்டு அழைக்கப்படுவர் பொ.சீவரத்தினம் அவர்கள் இவர் கரவெட்டி (கலட்டி) பள்ளிக்கூட வளவைச் சேர்ந்த திரு.திருமதி கிருஷ்ணபிள்ளை குங்குமம் தம்பதியினரின் மூத்த மகள் ஸ்ரீதேவியை மணம் முடித்து வதிரி கிழக்கு பஞ்சு தோட்டம் குறிச்சியில் வாழ்ந்து வந்தார். இவரது காலத்தின் பின்னரும் இவர்களது பிள்ளைகள் எமது சமூக நிறுவனங்களுடனும், உறவுகளுடனும் மிகுந்த நெருக்கத்தை கொண்டிருக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும்.

பொ.கிருஷ்ணேஸ்வரி :- இவர் அல்வாய் கிளானைக் குறிச்சியைச் சேர்ந்த திரு.இ.இராசா அவர் மனைவி தங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரன் திரு.இ.இராசரத்தினம் (சு.சு) அவர்களை மணம் முடித்து கணவனின் தாய் மனையில் வாழ்ந்து வந்தார்கள். அமரர்களான திரு.திருமதி.இராசரத்தினம் கிருஷ்ணேஸ்வரி தம்பதியினர் வாழ்ந்து வந்த இடத்தில் அவர்களது பெண்பிள்ளைகள் வாழ்ந்து வருகிறார்கள்.

பொ.பாலபரமேஸ்வரி :- இவர் எமதுகிளைக் கிராமமான “குருக்கட்டு” பகுதியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் தம்பிமுதத்து அன்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திரு.த.தர்மராசா அவர்களை திருமணம் புரிந்து, தற்போது கனடாவில் வசித்து வருகிறார்கள். இத்தம்பதியினரின் புதல்விகளான தருமதி கவிதா பார்த்தீபன், திருமதி அன்னராணி முகுந்தன் ஆகியோர் இக் குறிச்சியில் புதிதாக வீடு அமைத்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது தாய் மனைச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

பொ.சிவமலர் (செல்லக்கிளி) :- இவர் அல்வாய் கொக்கட்டியாவளவு குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி. கதிரவேல் பொன்னாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திரு.க.மங்களேஸ்வரன் அவர்களை மணம் முடித்து தாய் மனையிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

*குறிப்பு :- இக்குறிச்சியில் அமரர்களான திரு.திருமதி.பொன்னையா பொன்னம்மா தம்பதியினருக்கு முன்னர் இவர்களது முன்னோர்கள் எவராவது வாழ்ந்திருந்தால் எமக்கு அவ் விபரங்களை தந்துதவுமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறேன்.*

பங்குனி மாத இதழில் (இதழ் 2) எமது கிராமத்தில் உள்ள குறிச்சிகளை பதிவு செய்துள்ளோம். அவற்றுள் மூன்று குறிச்சிகள் தவற விடப்பட்டுள்ளன. அவையாவன உதிரையடி, கொட்டையடி (அப்பா வளவு) கைவிரை குறிச்சிகளாகும். இவற்றை எமக்கு தெரியப்படுத்தி யுள்ள நாகராசா ரகு, விஜயலிங்கம் விஜயராசா, திருநாவுக்கரசு செல்வ நாதன் ஆகியோருக்கு “நாங்கள்” நன்றியைச் சொல்லிக் கொள்கிறோம்.

*கிணறு - 3*

# நட்சத்திரப்பா கிணறு

செல்லக்குட்டி கணேசன்

கவிஞர் மு. செல்லையா வீதி தொடக்கம் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் கோயிலுக்கு திரும்பும் சந்தி வரை தெற்குப் பக்கமாக அமைந்த நிலப்பரப்புகளில் பெரும் பாலானவை வதிரி கிழக்கைச்(டைமன்ஸ்) சேர்ந்த மக்கள் சிலரின் பூர்வீக காணிகளாகும். இவற்றுள் குழாம்பு பகுதியும் ஒன்றாகும். இப்பகுதியில் பெரும்பாலான காணிகள் நட்சத்திரப்பாவுக்குச் சொந்தமானதாகும்.

நட்சத்திரப்பா என்பவர் வதிரி கிழக்கு கதிரான் வளவு குறிச்சியைச் சேர்ந்தவர். இவர் திருமதி மேனகை அம்மா தர்மராசா, திருமதி இராசம்மா வேலாயுதம் திருமதி பறுபதம் கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் தயார் ரோகினி ஆச்சியின் தந்தையாவார்.

நட்சத்திரப்பா நல்ல முயற்சியாளர். சுய தொழிலில் கவனம் செலுத்தியதோடு மாடு, வண்டி வைத்திருந்தும் தொழிலை விருத்தி செய்தவர். கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டடவர். குழாம்பு பகுதியிலுள்ள காணிகளின் வெறுமை கண்டு, அதனுள் தென்னம் பிள்ளைகள் வைத்து வளர்க்கும் எண்ணம் உருவாக தென்னம்பிள்ளைகளை வைத்தார். இதற்கான நீரை கிட்டத்தட்ட 1/2 கி.மீற்றர் தூரத்தில் அமைந் துள்ள இரண்டு துலாக்கிணற்றில் இருந்து கைத்தூக்கலாக எடுத்து வந்தார். இக்கிணறானது பூவற்கரையான் வீதியில் யாவத்தை குறிச்சிக்கு திரும்பும் மூலையில் டாக்டர் தங்கராசா(பரம்) வீட்டிற்கு அருகில் உள்ளது. (இன்று இக்கிணறு பாவனையற்று இருக்கிறது). இன்று போல் அல்ல அன்று. இன்று போல் நீரை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கு பல வழிகள் உண்டு. அன்று ஓலைப்பட்டையிலே நீர் எடுத்து வந்து அத்தென்னம்பிள்ளை களை வளர்த்தார். கிட்டத்தட்ட 70, 75 தென்னம்பிள்ளைகள் வளர்த்திருந்தார். அவ்வளவு முழுவதும் தென்னம் பிள்ளைகள் நின்றதையும் அவற்றுள் சில மரங்கள் இன்றும் உள்ளதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இவற்றை எண்ணிப் பார்க்குமம் போது வியப்பும் பெருமிதமும் ஏற்படுகின்றது.

தென்னம்பிள்ளைகள் வளர நீரின் தேவையும் அதிகரிக் அப்பகுதியில் ஒரு கிணறு வெட்டலாம் என்ற சிந்தனையும் அவரிடம் எழுந்தது. அவ்வாறு எழுந்த சிந்தனை யின் செயல்வடிவமே குழுப்பு கிணறு ஆகும். இக்கிணறு அவரால் வெட்டப்பட்டதால் இக்கிணற்றை எல்லோருமம் "நட்சத்திரப்பா" கிணறு என்றும் அழைப்பர்.

இக்கிணற்றின் அமைவிடமானது தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள பூவற்கரையான் வீதியில் சுமார் 300 மீற்றர் தூரத்தில் வடக்குப் பக்கமாக செல்லும் கை ஒழுங்கையில் சுமார் 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இதே போன்று அல்வாய் மமயிலிட்டிச் சந்தியில் இருந்து நேர் தெற்காக செல்லும் கை ஒழுங்கை வழியே சுமார் 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இரண்டு ஒழுங்கைகளும் கிணற்றடி வளவிலேயே சந்திக்கின்றன. பக்க ஒழுங்கைகளும் கிணற்றடிக் கான பாதையாக மட்டுமல்லாமல் இரரண்டு ஊருக்குமான பாதையாகவும் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இன்று மயிலிட்டிச் சந்தியில் இருந்து செல்லும் பாதை பயன்பாட்டில் இல்லை.

இரண்டு ஊர் மக்களின் பயன்பாட்டில் இருந்து வந்த இக்கிணறானது மக்களை(இரண்டு ஊர் மக்களும்) உறவு முறை சொல்லி அழைக்கின்ற பக்குவத்தையும் பயன்பாட்டையும் வளர்த்தது என்பது மிகையான கூற்று அல்ல. இது மட்டுமல்லாமல் தலைமுறை கடந்தும் அவ்வுறவு முறை வழியை பின்பற்றி வருவதும் மகிழ்வான விடமாகுமம்.

19 ஆம் நூற்றாண்டின் முற்கூற்றில் வெட்டப்பட்ட இக்கிணறு ஆனது சுமமார் நாற்பது, நாற்பத்தைந்து அடி ஆழம் கொண்ட நன்னீர் கிணறு ஆகும். ஆரம்ப காலத்தில் பூவரசம் மரம் நான்கை வளர்த்து அதனை ஆடுகாலாகக் கொண்டு அச்சு இட்டு பனைமரத்தால் செய்யப்பட்ட "துலா"வை நீர் எடுக்கப் பயன் படுத்தினர். காலமம் செல்ல கற்காளல் ஆடுகால் கட்டி புகையிரத தண்டவாள "கேடரை" துலாவாகப் பயன்படுத்தினர். இறுதி வரையும் இதுவே இக்கிணற்றில் நீர் எடுக்கப் பயன்பட்டிருந்தது.

கால்நடைகள்(மாடுகள்) வளர்த்த நட்சத்திரப்பா கால்நடைகள் நீர் அருந்துவதற்கான "பத்தல்", மற்றும் உடுப்பு துவைப்பதற்கான சலவைக்கல் என்று பல வசதிகளையும் கிணற்றடியில் செய்திருந்தார்.

இவ்வாறு பலநோக்குக் கொண்ட நட்சத்திரப்பாவின் செயற்பாடுகளுக்கு அவரது உறவுகளும், வாடிக்கையாளர்களும் உதவி வந்தமையானது அவரது ஆளுமையின் வெளிப்பாடாகும்

இக்கிணறு ஆனது 1984 ஆம் ஆண்டு வரை இரண்டு கிராமம மக்களின் பயன்பாட்டிலும் இருந்து வந்தது எனினும் 1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒரு துன்பியல் நிகழ்வால் அதன் பாவனையாது நின்று போனது. பாவனைக்குட்படாத அக்கிணறு ஆனது அவ்விடத்தில் உள்ள மக்களால் படிப்படியாக குப்பை கூளங்கள் போடப்பட்டு நிரப்பப்பட்டுள்ளது. இன்று இக்கிணறு ஆனது இருந்த அடையாளமுமம் இல்லாமல் போயிற்று என்புது குறிப்பிடத்தக்கது.

*(இக்கிணறு பற்றிய தகவல்களை எனது தயார் திருமதி இரத்தினம் செல்லக்குட்டியிடம் இருந்தும் வதிரி கிழக்கைச் சேர்ந்த ஒரு அன்பரிடம் இருந்தும் பெற்றுக் கொண்டேன்)*

ச.கருணானந்தன் பாலினி தம்பதியினருக்கு 2021.04.01 அன்று நிகேதானந்த் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்து கொள்கிறார்.

**புதிய குழந்தைகள் எமது ஊரவர்களுக்கு பிறந்தால் தயவு செய்து அறியத் தாருங்கள். இது காலத்தின் பதிவாகும். அதே போல திருமணங்களை பற்றியும் அறியத் தாருங்கள்**

# 2021 அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம்

■ வெற்றி துஷ்யந்தன்










எங்கள் பாலகணபதியான் உற்சவகாலம் என்பது உண்மையில் எங்கள் கிராமத்தை பொறுத்தவரை அதுவொரு பத்துநாள் கோலாகலம் தருகின்ற உன்னத நாட்கள் அவை. எங்களுடைய ஆலயத்தினுடைய சூழமைவு என்பது உண்மையில் அது எங்குமே வாய்த்ததில்லை என்று சொல்லும் அளவிற்கான வரப்பிரசாதமான சூழல். இந்த சூழமைவு கூட எங்கள் பாலகணபதியானின் உற்சவகாலத்தை ரம்மியப் படுத்தக்கூடிய காரணிகளில் மிகமுக்கியமானதென்றே சொல்லவேண்டும். இந்த பல்வகைமைச் சிறப்புக்கள் காரணமாக எங்கள் கிராமத்தவர்கள் அனைவரும் இந்த நாழிகைகளை தவறவிடாமல் அனைத்திடங் களிலிருந்தும் வருகைதரக்கூடிய சூழல்களையும் அவதானிக்கின்றோம். இன்றைய உலக ஒழுங்கு கொரோனோ வைரஸ் காரணமாக கடந்த இரண்டாண்டுகளாக குழம்பியிருக்கக்கூடிய சூழலில் கடந்த ஆண்டு எங்கள் ஆலய உற்சவம் நெருக்கடியான காலங்களுக்குள் வந்தமை யினால் இடம்பெறாமலிருந்து அநேக ஆலய செயற்பாடுகள் யாவுமே ஸ்தம்பிதமடைந்த நிலையை நாம் கொண்டிருந்தோம். ஆனால் இம்முறை எம்பெருமானின் அனுக்கிரகம் காரணமாக நெருக்கடியான சூழலிலும் எங்கள் ஆலய நிர்வாகம் மற்றும் அடியவர்களின் பூரண ஒத்துழைப்போடு புதுவருட தினம் கழித்து மூன்று நாட்களில் எம்பெருமான் கொடியேற்றம் கண்டமை உண்மையில் எங்கள் அடியவர்கள் அனைவரினதும் முகங்களிலும் நீண்டதொரு எதிர்பார்ப்பை பூர்த்தி செய்தது போலான ஒரு முகமலர்வை தந்திருந்தது. பெருவாரியான மக்களின் வருகையோடு இடம்பெற்ற கொடியேற்ற நிகழ்வு உண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ச்சியாக சுகாதார வழிமுறைகளை பேணி இரு நேரப்பூஜைகளும் மிக நேர்த்தியாக ஆடம்பரமில்லா ஆடம்பரம் சேர மிகச்சிறப்பாக இடம்பெற்றது. ஆறாம் நாளில் மஞ்ச வாகனம் ஏறிய எம்பெருமானின் அந்த ராஜ அழகு உண்மையில் மிக அற்புதமாக அமைந்தது. இன்னுமொரு தேர்த்திருவிழாவை இரவில் ரசிப்பது போலான ஒரு நிறைவை தந்தது .தொடர்ந்து ஏழாம் நாள் சப்பைரதம், எட்டாம் நாள் வேட்டை திருவிழா இரவுப் பூஜைகள் மற்றும் வீதி உலா எம்பெருமானின் அழகை மிகச்சிறப்பாக மெருகூட்டியது. இரதோற்ச வத்தை பொறுத்தமட்டில் வழமைபோல எதுவித குறைகளுமின்றி நிறைவாக பல எங்கள் அடியவர்களின் அங்கப் பிரதிஷ்டை, அடியளத்தல் போன்ற நேர்த்திகடன்களோடு சிறப்பாக இடம்பெற்றது. தீர்தோற்சவ நாழிகை இம்முறை மதிய நேரப்பொழுதில் மிக மிக சிறப்பாக இடம்பெற்றது. சம நேரத்தில் அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்திலிருந்து எங்கள் ஆலயம் நோக்கி எமது கிராம இளையவர்களின் காவடி நிகழ்வு மிகச்சிறப்பாக இடம்பெற்றது. நல்ல நேரப்பொழுதில் அது ஆலயத்தையும் வந்தடைந்தது. பூங்காவன திருவிழா வழமைபோல அரங்க நிகழ்வுகளை தவிர்த்து எம்பிரான் பூங்காவனப் பந்தலில் அத்தனை அலங்காரச் சிறப்புக்களோடும் வந்தமர்ந்து அனைவரிற்கும் அருள் பாலித்தார். உண்மையில் இம்முறை நாடு எதிர்நோக்கியிருக்கும் அசாதாரண சூழலிலும் கூட எமது பாலகணபதியானின் உற்சவம் மிகச்சிறப்பாக இடம்பெற்று அனைத்து மக்கள் மத்தியிலும் நல்ல மகிழ்வையும் சிறப்பையும் ஏற்படுத்த வழிசமைத்த எங்கள் பாலகணபதியின் பாதக் கமலங்கள் பணிந்து இந்தப் பிரதியை நிறைவு செய்கின்றேன்.

## காவோலையாகும் குருத்துக்களே...

காவோலையாகும் குருத்துக்களே - எம்மை
ஒரு கணம் திரும்பிப் பாருங்கள்
எமது கால்களாம் கங்குகள் - உங்களைப்
பாதுகாக்க எம்மிலும் தலை நிமிர்ந்து
வானுயர்ந்த உங்களால் கொள்ளும் பெருமிதம்
மாமலையைவிடப் பெரியது - ஆதலால்
சிறிது காது கொடுத்து கேளுங்கள்.

உங்களைப்போல் நாமும் ஒரு காலத்தில்
உயர்ந்து நின்றோம் பனை உச்சியில்
காலமெல்லாம் செய்த சேவையால் நாம் தளர
இளையோர் நீவீர் மேலே உயர்வு பெற ஊக்கி
உயரவழி அமைத்துக் கொடுத்தோம் - ஆதலால்
பனைமரம் உயர்ந்து பேறுகள் பல கொடுக்க
அயராது உழைத்துக் காவோலை ஆனோம்.

பசுமையாய் இருந்த காலத்தில் - வாட்டும்
வெப்பத்தை ஏற்று கால்களில் நீர் கொண்டு
வானுயர வைக்கும் உணவு ஆக்கி
இனிய இன்சுவைப் பண்டங்கள் செய்யும்
மூலப் பொருளை வழங்கி உதவினோம்.
இன்னும் காவோலையாகி அடியில் உமக்கு
உரமாகி மாறி என்றும் உதவுவோம்.

இந்த நிலை என்றோ உங்களுக்கும் கூடும்
அந்நேரம் உங்கள் மனம் வாடும்.
நன்றியுடன் எம்மை நினைத்து நீங்களும் நாமும்
பொருத்தமுடன் அனுசரித்து வாழப் பழகுவோம்.

- கந்தையா பரமானந்தன்

## அவாந்தரம்

நம்முள் விளையும்
நெருப்பாற்றை தாண்டும் முயற்றுகைகள்
கருப்பாடுகளால் மேயப்படுகிறது
இன்றும் கரும் பூதமென விகாரிக்கும்
மனு இன மேலாதிக்க முரண்படுகை.

எங்கள் குலமழிந்து சிதையும்
தொடர் வரலாற்றை
குறை விழியால் நோக்கும்
உலக நியாய நீதி பிரசன்னம்

கெந்தக கனலில் அவிந்தழிந்து
தடந் தெரியாது போன
சொந்த மண்ணின் சோபனங்கள்
எந்தக் காலத்தில் துளிர்த்தெழுமோ
காபந்து கைகொடுப்புகளுக்கு
யார் வந்து முன்நிற்பரோ?
என்றிடும் ஏக்கப் பரப்பினுள்
இன்றும் துல்லியமற்றதாகும்
தூர நோக்குதல்கள்

அரசியல் சூறைக்குள்ளால்
மீண்டெழுந்த இன்றைய மாற்றத்திலும்
நமக்க ஏற்றதாகும் மாற்றம் நிகழுமா?
நம்பி இருத்தலும் நம்பி இணைவதும்
நம்பி பின தொடர்ந்த செல்வதும்
இம்மியும் நம்பிக்கை ஊட்டாத
கால விளைவுகளுள்
அவாந்தரிகளாக...

– அல்வாயூர் சிவ.சிவநேசன்

## ஏழையின் அழுகை

தெருவிலே எறிந்து கிடந்த
தென்னை மரக் கன்றொன்றை
தூக்கி வந்தேன் ஆவலுடன் வீட்டுக்கு
பெருஞ்சிரமம் பாராமல்
வருவோர் போவோர் கண்பட
வாசலிலே நாட்டி வைத்தேன்
நாளுக்கு நாள் வளர்ந்து
நலங்குன்றாது இருந்தது
கூழுக்கு வழியில்லாத போதும்
கூலிகொடுத்து உரம் விதைத்தேன்
மனைவி நச்சரிப்பாள்
மக்கள் புறஞ்சொல்வார்
வீண் விரயம் என்று வாதிடுவர்
நாலு தேங்காய் காய்ந்து விட்டால்
நாளுக்கொன்று பாவித்திடலாம்
நப்பாசை கொண்டிருந்தேன்
காதிலும் கேளாமல் அவர்களுக்கு
தாளமடித்துத் தேற்றிடுவேன்
என் பணியைத் தொடர்ந்திடுவேன்
மனதுக்குள் கோட்டை கட்டி
மகிழ்வுடனே பார்த்து வந்தேன்
ஒரு நாள் ....
மேகம் இருளானது
மண்ணும் மணத்தது
பெரும் புயல் மழை
சுனாமி போல் குதித்தது
அகோர தாண்டவமாடி
உயிர்களையும் கேட்டது
ஆவலோடு நாட்டிவைத்த
தென்னை மரம் தரையினிலே
கோரப் புயல் மழைக்கு
பெரும் இரையாகியது
என் மனமும் உடைய
இரும்பு இதயங்களும் நெகிழ
கதறிக் கதறி அழுது விட்டேன்
என் விதியை என்ன சொல்ல
என் விதியை என்ன சொல்ல

- மானந்தன் - அல்வாய்




## முயற்சி

நாலுக்கு நான் போனேன்
நாள் மழுதும் பாடு பட்டேன்
தோளுக்கு தோள் ஆனேன்
தொட்டதெல்லாம் தொடராக
ஆளுக்கு ஆழானேன்
அழகாக ஆக்கி வைக்க
நாளுக்கு ஒவ்வொன்றாக
நாலணா பையிலிட்டேன்
கூலிக்குப் பரிசதனால்
கூன்தனை நிமிர்த்தி வைத்தேன்
வேளைக்கு வேளையாக
வெந்துயர் நீக்க நின்றேன்
வேதனம் கூடி நிற்க
வேளையே போயிருந்தேன்
நாளுக்கு நான் எடக்கும்
நல்லதொரு முயற்சியினால்
நாட்டிற்கு நாமெடுக்கும்
நல்லதொரு தொழிலாக
நாட்டக்கு நாடு சென்று
நலமாக வாழந்து காட்டி
ஈட்டுக்கு ஏது உண்டு
என்றன்றொ முயற்சி கண்டேன்

- சி.செல்வநாதன்

## உயிர்ப்பு

பொறாமைத் தீயில் வெந்து
என்னை
பொசுக்கிட நினைத்தாலும்...

அகங்கார மமதை கொண்டு
என்னோடு
பகைமை வளர்த்தாலும்...

பொல்லாங்குகள் சொல்லி
என்மீது
அவதூறு புனைந்தாலும்...

பொல் எடுத்துப் பொங்கி
எந்தன்
பொறிகளைத் தகர்த்தாலும்...

பகைவனையும் அரவணைக்கும்
என் இதயம்,
உயிர்க்கும்!
பீனிக்ஸ் பறவையாய்...

– க.பரணீதரன்